

சந்திர கிரகணம் வருகின்ற பொழுது சந்திரன் இருளடை கிறது. இது ஏன் என்பது மாணவர் பிரச்சினை. அந்த நாடகத்தில் அப்பாடசாலையில் சமயம் கற்பிக்கும் ஒரு ஆசிரியர் ஒருவர் வருகிறார். இதற்கு அவர் பதில் தருகிறார்.

"ராகு - கேது எனும் இரு பாம்புகள் வந்து சந்திரனை விழுங்க, சந்திரனின் ஒளி போய் அது இருளாகி விடுகிறது" என்கிறார்

அதில் வரும் விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர், "சூரியனும் சந்திரனும் பூமியும் ஒரு நேர்கோட்டில் வர, பூமி சந்திரனை மறைக்கும் போது சந்திரன் மீது நிழல் விழுகிறது அதுவே சந்திரன் இருளடையக் காரணம்" என்கிறார். மாணவனுக்கோ பெரும் திண்டாட்டம். இருவரும் ஆசிரியர்கள். யார் சொல்வதை நம்புவது? இதில் எது சரி ?

விஞ்ஞான ஆசிரியர் சொல்வதா ? சமய ஆசிரியர் சொல்வதா? அவன் சமய ஆசிரியரிடமே சென்று இவ்விரு பதில்களில் "எது சரி." என கேட்கிறான். அதற்கு சமய ஆசிரியர் கூறும் விடை வெகு சுவராஸ்யமானது.

"இப்படி வினா வந்தால் சமயபாடம் எழுதும் போது நான் கூறியதை எழுது. விஞ்ஞான பாடம் எழுதும் போது அவர் கூறியதை எழுது'" என்கிறார். இதுவே ஆசிரியர் தீர்ப்பு.

என் எழுத்துக்களிலும் செயல்பாடுகளிலும் நாடகங்களிலும் இவை வெளிப்படத் தொடங்கின. ஆனால் அவை வேறுவிதமாக வந்தன.

காலம் சென்றது! பாடசாலை விட்டு பல்கலைக் கழகம் சென்றேன். அங்கு என் சிந்தனையில் பெரிதும் மாற்றம் ஏற்பட்டது. அந்த மாற்றம் என்னை மார்க்சிய எழுத்துகளுக்கு இழுத்துச் சென்றது. கார்ல் மார்க்ஸ் தொடக்கம், அந்தோனியோ குரோம்சியூடாக; இன்றைய மார்க்ஸிஸ் சிந்தனையாளர்களும்; நவீன சிந்தனையாளர்களான தெரிதா, பூக்கோ, லகான், ரோலன் பார்க் போன்றோரும்;

ஆப்பிரிக்க லத்தின் அமெரிக்கச் சிந்தனையாளர்களும் - அறிமுகமாகினர்.

இந்திய தத்துவஞானம், முக்கியமாக; உலோகாயதம், தாந்த்ரீகம் சமணம், பௌத்தம், சார்வாகத் தத்துவங்களும் அவை சார்ந்த எழுத்துகளும் ஆய்வுகளும்;

பெரியார், அம்பேத்கர், அயோத்திதாசர் போன்ற சிந்தனையாளர்களும் அறிமுகமாகினர்.

புதிய சிந்தனைகளுக்கு தம்மை பரிச்சியப்படுத்திக் கொள்ளுதலே ஒரு பல்கலைக்கழக ஆசிரியரின் பணி ஆகும்.

இதனை ஆங்கிலத்தில் தம்மை. 'அப்டேட்' பண்ணிக் கொள்ளல் என்பர்

கடலில் சேர்ந்த கால்வாய் நன்றிகூறும் தருணம் இது!

கலைஞர் பற்றி என் மனப்பதிவை எழுது முன்னர் நான் உங்களுக்கு என்னை முதலில் அறிமுகம் செய்து கொள்ள வேண்டும்

நான் ஈழ நாட்டைச் சேர்ந்தவன். எனது பெயர் மௌனகுரு.

1943 ல் பிறந்த நான் இன்று 80 வயதைத் தாண்டிவிட்டேன். இனி போகும் காலம்.

பல்கலைக்கழகப் பேராசிரியராக இருந்தவன்.

இப்போது ஓய்வு! இரண்டு பல்கலைக் கழகங்களில் கற்பித்திருக்கிறேன்!

ஒன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் -

இன்னொன்று கிழக்குப் பல்கலைக் கழகம்!

1970 களில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் 'நாடகமும் அரங்கியலும்' பாட நெறி உருவாக்கப்பட்ட போது நானும் அதில் ஒருவனாக இருந்தேன்.

1990களில் கிழக்குப் பல்கலைக்கழகத்தில். தமிழ்த் துறை நாடகத் துறை - நுண்கலைத் துறை என பல துறைகளையும் அறிமுகப்படுத்தி வளர்த்தெடுத்தோம்.

தமிழ் ஆய்வு, பண்பாட்டாய்வு, நாடகாய்வு, நாட்டுப் புற ஆய்வு , என்பன எனது ஆய்வுத் துறைகள். ஆய்வு - ஆக்கமென 30க்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளேன் - அவற்றுள் நான்கு நூல்கள் சாகித்திய மண்டலப் பரிசுகள் பெற்றுள்ளன. இப்போது பின்பட்டப் படிப்பு மேற்பார்வையாளராகவும் பல்கலைக்கழக ஆலோசனைச் சபைகளின் உறுப்பினராகவும் பணிபுரிகிறேன்!

இந்தப் பின்னணியில்தான் கலைஞர், 1953-1954களில் எனது பதின்ம வயதிலேயே எனக்கு அறிமுகம் ஆகின்றார். அப்போது கலைஞருக்கு 30 வயது இருக்கும். எனக்கு 13 வயது இருக்கும்.

அப்போதுதான் தி.மு.க முன்னோடிகளின் எழுத்துகள் கையளவு நூல்களாக ஆறு அணாவுக்கு அறிமுகம் செய்யப்பட்டன. 10 அல்லது. 15 பக்கங்கள் கொண்ட சிறிய நூல்கள் அவை எமது பார்வைக்குப் புதியனவாக இருந்தன. புத்தக அமைப்பிலே பெரும் மாறுதல் ; சாதாரண கல்வி அறிவு பெற்ற மகனும் படிக்க வேண்டும் என்ற அக்கறையில் எழுதப்பட்ட நூல்கள் அவை.

10 வயதிலேயே என க்கு வாசிப்புப் பழக்கம் ஆரம்பமாகிவிட்டது. அது எனது பாக்கியம் . மகாபாரத இராமாயண பெரிய எழுத்து நூல்களை நான் சத்தமாக வாசிக்க, எனது பாட்டன், பாட்டி, தாய், உறவினர் சூழலில் இருந்து கேட்பார்கள். அவர்களில் பலர் பாடசாலைக்குச் செல்லாதவர்கள். புராணங்கள் மீது எனக்கு ஒரு மகாபற்று . புராணக் கதைகளை உண்மையென நம்பும் வயது. ஆனால் கடுகளவு காட்சியளித்த இந்த கையளவு நூல்கள் எனக்குத் தோற்றத்திலும் உள்ளடக்கத்திலும் பெரிய வியப்பை அளித்தன. அவை பெரும் காரமாக எனக்கு உறைத்தன. அவை இன்னொரு புது உலகத்தை எனக்குக் காட்டின.

கிராமியச் சடங்குகளிலும், விரத அனுஷ்டானங்களிலும் பழமையிலும், புராண இதிகாச கதைகளிலும் தோய்ந்து மூழ்கிக் கிடந்த எனது மூளையை அவை சற்று சலவை செய்தன. பேரறிஞர் அண்ணா, கலைஞர், சிபி சிற்றரசு, பேராசிரியர் என பலர் ஞாபகத்துக்கு வருகிறார்கள். அவர்களது கையளவு நூல்களும் ஞாபகத்துக்கு வருகின்றன.

தனது எளிய தமிழ், அழகிய அடுக்கு மொழிகள், புராணங்கள் மீதும் மூடப் பழக்கவழக்கங்கள் மீதும் நடத்திய அதிரடித் தாக்குதல்கள், சமூகக் கொடுமைகளை குத்தி வாங்கும் கிண்டல் எழுத்துக்கள், இதனால் எம்மைப் போன்ற பதின்ம வயது இளைஞர்களையும் அன்று கலைஞரின் எழுத்துகள் வெகுவாகக் கவர்ந்தன.

அவரது கையளவு நூலில் இருந்த எனது வாசிப்பு, பின்னர் அவரது பெரும் நூல்களுக்குச் சென்றது. அச்சமயம் என்னை வழிநடத்த தி.மு.க ஆதரவாளர்களான சில ஆசிரியர்களும் வந்து வாய்த்தனர்.

கிராமத்திலே பிறந்து வளர்ந்த எனக்கு, ஊர்க் கூத்துக்கள் தந்த புராண மயக்கத்தில் ஆழ்ந்திருந்த எனக்கு, புராண இதிகாசக் கதைகளில் கிறங்கிப் போயிருந்த எனக்கு, மூடநம்பிக்கைகளையே நிஜமென நம்பி வாழ்ந்த எனக்கு, கலைஞரின் எழுத்துகள் புதுத் திசை காட்டின. புது ஒளி ஊட்டின. என் சிந்தனையிலும் செயற்பாட்டிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டன. முக்கியமாக அவரது "தூக்கு மேடை" நாடகம் பாடசாலைக் கல்வி பற்றி பாடசாலை மாணவர்கள் பற்றி, பேசுகிறது. அவர் பேசிய அந்தப் பொருள் நாம் பாடசாலையில் எதிர்கொண்ட அனுபவங்களே.

இது 1950 களில் முற்பகுதியில் நான் வாசித்த அவரது கருத்து.

இப்போது 2023 ஆம் ஆண்டு!

ஏறத்தாழ 73 வருடங்களுக்குப் பின்னர் தமிழ் நாட்டு கல்வி அமைப்பிலும் ஈழத்துக் கல்வி அமைப்பிலும் இதே நிலைதான் .

இக்காலத்தில் அது இன்னும் மோசமாக உள்ளது! புராணம் சொல்வதே சரி ; சந்திரனை பாம்பு விழுங்குகிறது சரி; என வாதிடப் பெரும் அறிஞர்களும் வந்து விட்டார்கள் அவர்கள் அதற்கு ஆயிரம் புராண நியாயம் கூறுவார்கள். இதற்கு ஒரு பெரும் அரசியல் பின்புலமும் உண்டு.

இதனை அன்றே குத்திக் கிழித்து எழுதினார் கலைஞர். புராணப் பொய்கள் எப்படி சிறுவரது மனதை சீரழிக்கின்றன என்ற அவரது அன்றைய கருத்து இன்றும் பொருந்தும். ஆம்; ஆரம்பத்தில் என் பதின்ம வயதில் அவரது அன்றைய காத்திரமான எழுத்துகளால் நான் பெரிதும் தாக்கப்பட்டேன்!

பேராசிரியர்
சி.மௌனகுரு
இலங்கை

இதனை பிற்காலத்தில் மார்க்ஸிய எழுத்துகள் செய்தனவாயினும் தமிழ்நாட்டில் பின் தங்கிய படிப்பு அறிவு இல்லாத பகுதியினர் வாழும் பட்டி தொட்டி எல்லாம் இக் கருத்துகளைப் பரப்பியவர்களுள் முக்கியமானவர் கலைஞரே!

அவருக்கு என்றொரு வழிபடுபட்டாளமே எங்கள் மத்தியில் அன்று இருந்தது. ஒரு படிப்பு வட்டம் கூட வைத்திருந்தோம்.

அதில் தீவிரமாக இருந்த ஜமால்தீன், அமலதாஸ் போன்ற பால்ய நண்பர்கள் ஞாபகத்துக்கு வருகிறார்கள். ஏழாம் வகுப்பிலே அப்போது எனக்கு வயது 13 இருக்கும் . இக்கருத்துகளை சமய ஆசிரியர் கந்தசாமியிடம் கூறி,

'புராணக் கருத்துகளை ஏற்க முடியாது' என்று வாதிட்ட வேளை. கடுமையான அடியும் வாங்கியிருக்கிறேன். அவர் என்னிடம் கேட்ட கேள்வி இப்போது ஞாபகத்தில் உண்டு.

"நீ என்ன சூனா மானாவா? (சுயமரியாதைக் கழகக் காரனா?) என்பதாகும். அன்று, அந்த ஆசிரியர் போட்ட அடி. எனக்கு ரோசம் கொடுத்தது . என்னை உலுக்கியது.

மேலும் மேலும் தேடித்தேடி கலைஞர் நூல்களை வாசிக்கத் தொடங்கினேன்.

1.தமிழ் இலக்கியத்தை மீள் பார்வை செய்தமை
2.அவற்றை விமர்சன ரீதியாகப் பார்த்தமை
3.அவற்றிற்கு புது வியாக்கியானம் அளித்தமை
4.புராணங்களைக் கேள்வி கேட்டமை
5.மூட நம்பிக்கைகளின் முகமூடிகளைக் கிழித்தமை என்பன எனக்குப் பிடித்துப் போக; நானும் அவ்வாறே ஆகத் தொடங்கினேன். பின்னர் என் எழுத்துக்களிலும் செயல்பாடுகளிலும் நாடகங்களிலும் இவை வெளிப்படத் தொடங்கின. ஆனால் அவை வேறுவிதமாக வந்தன.

இப்படி நான் வந்து நிற்பதற்கு என்னை வழிநடத்தியது அன்று கலைஞரின் கருத்துகளே என்று கூறுவதில் எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை

கண் விழிக்காத பூனைக்குட்டியாக இருந்த என்னை என் பதின்ம வயதில் கண் விழிக்கச் செய்தன அவரது எழுத்துகள், சமூக சவால்களுக்கு முகம் கொடுக்க வைத்தன. அவரது எழுத்துக்கள். சிறுவயதிலேயே ஊரிலே புரட்சிக்காரன் என்ற பட்டத்தை எனக்குப் பெற்றுக் கொடுத்தன அவரது அன்றைய எழுத்துக்கள். என் வயதொத்த மாற்றுச் சிந்தனையாளர் பலர் இப்படி வளர்ந்தவர்களாகவே இருப்பார்கள். கலைஞரை நான் நேரிலேயே கண்டு அளவளாவியது இல்லை. அந்த சந்தர்ப்பம் எனக்கு கிடைக்கவில்லை.

2004 ஆம் ஆண்டிலேயே தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் நடத்திய ஓர் ஆய்வு மகாநாட்டில் அவர் பேச வந்த போது தூரத்தில் இருந்து பார்த்திருக்கிறேன். அவர் உடல் மொழியையும் கவனித்திருக்கிறேன். எனக்கும் அவருக்குமான தூல உறவு அதுதான். அவர் தமது முதிர்ந்த வயதிலே சங்க இலக்கியம், திருக்குறள், சிலப்பதிகாரம், தொல்காப்பியம் ஆகிய நூல்கள் பற்றி தன் பார்வையில் சில கருத்துக்கள் கூறியிருக்கிறார். திருக்குறளுக்கு புதிய உரையே எழுதி இருக்கிறார்

பகுத்தறிவு சிந்தனைகளின் அடிப்படையில் அது அமைந்துள்ளது. இத்தனைக்கும் அவர் பள்ளிப்படிப்பை முற்றாக முடித்தவர் இல்லை. அவர் எழுதுவதற்கான சூழலும் அதிகார வளமும் வசதிகளும் பின்னாளில் அவரை வந்து அடைந்தன. அவர் எழுத்துகள் பற்றி பல விமர்சனங்கள் உண்டாயினும்; அவர் என்னையும் என்னோடு ஒத்த பல மாற்றுச் சிந்தனையாளர்களையும் கடலோடு சேர்த்த ஊர் வாய்க்கால் போலவே எனக்கு தெரிகிறார். ஊர் வாய்க்கால் என்பது ஒரு குறைவான சொல் தொடர் அல்ல! ஊரிலே வாய்க்கால் தான் எல்லாவற்றிற்கும் அடித்தளம்.

வாய்க்கால் ஊரின் ஒரு உயிர்த் துடிப்பு. அந்த வாய்க்கால் நதியோடு நம்மைஇணைக்கும். அந்த நதி கடலுக்கு எம்மைக்கொண்டு செல்லும். அந்தக் கடல் நமக்கு உலகத்தைக் காட்டும். நம்மைக் கடலுக்கு அனுப்பிய வாய்க்காலை எப்படி மறப்போம்? அவர் இறப்பு என்னைப் பாதித்தது. அந்தப் பாதிப்பில் அவர் இறந்த 2018 இல் அன்றே நான் ஒரு கவிதை எழுதினேன்.

அதை நான் பிரசுரிக்கவே இல்லை. அந்தக் கவிதையை இத்தோடு இணைத்துள்ளேன். என்னை; இந்த குறிப்புகளை எழுத வேண்டிக் கொண்ட நண்பர் ராஜேந்திரனுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

தென் பாண்டிச் சிங்கம்!

தென்பாண்டிச் சிங்கத்தைப் பற்றி அந்த நூலுக்கு விருது வழங்குவதைப் பற்றி எண்ணி மகிழ்கின்ற நேரத்தில் இப்படி ஒரு வரலாற்றுக் கதை இருக்கின்றது; அதை நீங்கள் பெருங்கதையாக எழுத வேண்டுமென்று சொன்னசிறுகதைமன்னன்தென்னரசைமறந்துவிட்டால், நன்றி கொன்ற குற்றத்திற்கு நான் ஆளாவேன். அந்தப் பகுதிகளுக்கெல்லாம் என்னை அழைத்துச் சென்று, வாளுக்கு வேலி பிறந்த ஊர் எது?அவர் வாழ்ந்த இடம் எது? அவருக்கும் அவரால் அன்போடு விரும்பப் பெற்ற சுந்தராம்பாள் என்ற பெண்ணுக்கும் தொடர்பு ஏற்பட்ட இடம் எது? அதைப் போலவே, பட்டமங்கலத்தில் வல்லத்தரையன் வாழ்ந்த இடம் எப்படி? இவைகளையெல்லாம் இரண்டு மூன்று மாதகாலம் என்னை அந்தப் பகுதிக்குச் சுற்றிச் சுற்றி அழைத்துச் சென்று விளக்கங்களை அவர் தந்தார். அந்த அடிப்படையை வைத்துத்தான் அந்த வட்டாரத்தில் வாழ்ந்து மறைந்த வீர மறவர்களான அம்பலக்காரர்களுடைய தலைவர்களை மையமாக வைத்து அந்தக் கதை என்னால் எழுதப்பட்டது.

- கலைஞர்